செ.வெ.எண்:56 நாள்:25.1.2018

**மூப்பியல் சிகிச்சை பிரிவு மற்றும் பாலியேட்டிவ் கேர் எனப்படும் இரண்டு சிகிச்சை பிரிவுகள் ரூ.23.50 கோடி மதிப்பீட்டில் விரைவில் தொடங்கப்பட உள்ளன – மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் தகவல்.**

புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் கோட்டாட்சியர் அலுவலகத்தில் விராலிமலை சட்டமன்ற தொகுதிக்கான வளர்ச்சித்திட்ட பணிகள் குறித்த அனைத்துதுறை அலுவலர்களுக்கான ஆய்வுக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்.இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (25.1.2018) நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் விராலிமலை சட்டமன்ற தொகுதியில் நடைபெற்று வரும் மற்றும் மேற்கொள்ளப்பட உள்ள வளர்ச்சித்திட்ட பணிகள் குறித்து அனைத்துதுறை அலுவலர்களுடன் கலந்தாலோசனை மேற்கொண்டு ஆய்வு செய்தார். இந்த ஆலோசனையின்போது விராலிமலையில் மலைப்பாதை பகுதியில் பூங்கா அமைக்கும் பணியினை மேற்கொள்வது, தொகுதிக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் சாலைப்பணிகள், பூங்கா அமைக்கும் பணிகள், மின்விளக்குகள் அமைக்கும் பணி, அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கும் பணி உள்ளிட்ட பல்வேறு வளர்ச்சித்திட்ட பணிகள் குறித்து அனைத்துதுறை அலுவலர்களுடன் ஆலோனை மேற்கொண்டார்.

இக்கூட்டத்தில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் பேசுகையில் தெரிவித்ததாவது,

மறைந்த மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் விராலிமலை சட்டமன்ற தொகுதிக்கு பல்வேறு திட்டப்பணிகள், கட்டடங்கள், அரசு அலுவலகங்களை அளித்துள்ளார்கள். குறிப்பாக மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் சட்டப்பேரவையில் 110 ஆம் விதியின் கீழ் 2015 ஆம் ஆண்டில் அறிவித்த விராலிமலை அரசு தொழில் பயிற்சி நிலையத்திற்கு கட்டடம் கட்ட தற்போது நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் அரசு தொழில் பயிற்சி நிலைய கட்டடம் கட்ட ரூ.3.25 கோடியும், விடுதி கட்டடம் கட்டுவதற்கு ரூ.1.28 கோடியும் நிதி ஒதுக்கீடு செய்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் கட்டடம் கட்டும் பணியினை பொதுப்பணித்துறை அலுவலர்கள் விரைந்து மேற்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தினார். மேலும் பல்வேறு துறைகளின் கீழ் கட்டடம் கட்ட நிதி ஒதுக்கீடு செய்துள்ள பணிகளை குறித்த காலத்திற்குள் விரைந்து முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர அரசு அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

பின்னர் கோட்டாட்சியர் அலுவலத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் உடல் ஊனமுற்றோருக்கு மாதாந்திர உதவித்தொகையாக ரூ.1,000 வழங்கும்

திட்டத்தின்கீழ் 14 மாற்றுத்திறனாளிகளுக்கு மாதாந்திர உதவித்தொகை பெறுவதற்கான ஆணைகளையும், 20 முதியோர்களுக்கு மாதம் தலா ரூ.1,000 பெறுவதற்கான ஆணைகளையும், முதிர்கன்னி உதவித்தொகை பெறும் திட்டத்தின்கீழ் 1 பெண்ணிற்கு மாதம் ரூ.1,000 பெறுவதற்கான ஆணையினையும் வழங்கினார்.

பின்னர் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் பேசுகையில் தெரிவித்ததாவது,

மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு சார்பில் கடந்த சட்டமன்ற கூட்டத்தொடரில் இரண்டு புதிய திட்டங்கள் அறிவிக்கப்பட்டது. தமிழ்நாடு முழுவதும் 31 மாவட்டங்களில் வயதானவர்களுக்காக ஆண், பெண் இருபாலருக்கும் மூப்பியல் சிகிச்சை தனியாக தொடங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ரூ.50 லட்சம் செலவில் ஒரு மருத்துவர், ஆறு செவிலியர் உட்பட 12 பேர் இந்த பிரிவில் பணியாற்றுவார்கள். சென்னை நீங்கலாக 31 மாவட்டங்களுக்கும் சேர்த்து ரூ.15.50 கோடி மதிப்பில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

புற்றுநோய் போன்ற தீராத வியாதிகளால் வாழ்க்கையின் கடைசி கட்டத்தில் வாழும் நோயாளிகளுக்கு வலியில்லாமல், படுக்கையினால் ஏற்படும் புண்கள் இல்லாமல் இறுதி காலக்கட்டத்தை கழிக்க வேண்டும் என்பதற்காக பாலியேட்டிவ் கேர் எனப்படும் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. முதற்கட்டமாக 20 மாவட்டங்களில் செயல்படுத்த முடிவு செய்யப்பட்டு, தலா ரூ. 40 லட்சம் செலவில் தனி மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களைக் கொண்டு மொத்தம் ரூ.8 கோடி மதிப்பில் தனிப்பிரிவு ஏற்படுத்தப்பட்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

பாலியேட்டிவ் கேர் மற்றும் மூப்பியல் சிகிச்சை ஆகியவை ஏழை, எளிய மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

முதற்கட்டமாக இந்த இரண்டு சிகிச்சை பிரிவுகளும் தலா 10 மாவட்டங்களில் தொடங்க தயார் நிலையில் உள்ளது.

இவ்வாறு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் கந்தர்வகோட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு.பா.ஆறுமுகம், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.ராமசாமி, திட்ட இயக்குநர் ஊரக வளர்ச்சி முகமை திரு.சந்தோஷ்குமார், கோட்டாட்சியர் திரு.சேக்முகையதீன் உள்பட பொதுப்பணித்துறை, வேளாண்மைத்துறை, சுகாதாரத்துறை, கால்நடைத்துறை உள்ளிட்ட பல்வேறுதுறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு:** செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை மாவட்டம்.